விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 330 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 27 புதன்கிழமை (13.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி



### யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபன்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ் .மாவட்ட 15

### வேட்பாளர் பட்டியலில்

## தனக்குத் தெரியாமல் பெயர் உள்ளடக்கம்

### யாழில் பெண்ணொருவர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழுவொன்று தனக்குத் தெரியாமல் தன்னுடைய பெயரை வேட்பாளர் பட்டியலில் குறிப்பிட்டுள்ளதாகப் பெண்ணொருவர் யாழ்ப் 15

### தேர்தல் தொடர்பில்

## 2999 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

நாளை 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை (செப்ரெம்பர் மாதம் 26ஆம் 15

### தேர்தலை முன்னிட்டு

## நெடுந்தீவுக்கு விசேட படகு சேவைகள்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, யாழ்ப்பாணம், குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கு இடையிலான விசேட படகுச் சேவைகள் 15

# நாளை தேர்தல்

## நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்காக அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள நிலையில் நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



(02ஆம் பக்கம் பார்க்க)

### நவம்பர் 21ஆம் திகதி

## புதிய பாராளுமன்ற அமர்வு

### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க புதிய பாராளுமன்றக் கூட்டத்தொடர் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 70ஆவது சரத்தின் பிரகாரம் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, புதிதாகத் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் முதலாவது அமர்வு எதிர்வரும் 15

## அமைதியான தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

### தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர்




(கொழும்பு)

அமைதியான தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 15

## வாக்கெண்ணும் நிலையத்தின் பாதுகாப்புத் தொடர்பில் ஆய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் வாக்கெண்ணும் நிலையமான யாழ்.மத்திய கல்லூரியின் பாதுகாப்புத் தொடர்பில் 15

பாராளுமன்றத் தேர்தல்
வாசகர் கருத்துக்கணிப்பு
இன்றே இறுதி நாள்
பரிசுகளை வென்றெடுக்க
உடனே வட்சப்பில் அனுப்புக.

7ஆம் பக்கம் பார்க்க

### கைபேசிகளை

## வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லாதீர்கள்


(யாழ்ப்பாணம்)

வாக்களிப்பு நிலையங்களுக்கு கைபேசிகளை எடுத்துச் செல்ல வேண்டாம் என பிரதிப்பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ கோரிக்கை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமூக சேவைக் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி விஜயரூபன் நிவேதனா** அவர்களுடைய அன்புத் தந்தையார்

## நடேசு பாரதராசா

அவர்கள் 11.11.2024 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 05.10.1951

மறைவு 11.11.2024

**பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-1571)

# பரீட்சை வினாத்தாளில் அரசியல் கட்சியொன்று தொடர்பான வினாக்கள் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பரீட்சை வினாத்தாளில் அரசியல் கட்சியொன்று தொடர்பான வினாக்கள் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மத்திய மகா வித்தியாலயத்தில் இரண்டாம் தவணைப் பரீட்சையில் உயர்தர மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பரீட்சை வினாத்தாள் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த வினாத்தாளில் அரசியல் கட்சியொன்று தொடர்பாக ஐந்து வினாக்கள் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அமைய இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, அந்த வினாத்தாள் சம்பந்தப்பட்ட பாடசாலை தரப்பினரால் தயாரிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

# நல்லூர் பிரதேச சபை வழங்குநர்களை பதிவு செய்தல் - 2025

சபையானது 2025 ம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**1. பொருட்கள்**

1.1. காகிதாதி எழுதுபொருட்கள்
1.2. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
1.3. சித்த மருத்துவ மருந்துகள்
1.4. நூலகங்களுக்கான நூல்கள்
1.5. துணி வகைகள்
1.6. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
1.7. கற்கள், மணல்
1.8. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
1.9. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
1.10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
1.11. மின்வழங்கு பொருட்கள், மின்பாவனைப் பொருட்கள்
1.12. எரிபொருட்கள் உராய்வு நீக்கி
1.13. இரும்புப் பொருட்கள்
1.14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
1.15. பனைமரங்கள், சலாகைகள்
1.16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
1.17. கணணி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
1.18. சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமிநாசினிகள்
1.19. பாதணிகள், தோற்பொருட்கள், மழைஅங்கிகள்
1.20. அலங்காரப் பொருட்கள்
1.21. இலத்திரனியல் பொருட்கள்

**2. சேவைகள்**

2.1. அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
2.2. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
2.3. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
2.4. ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்
2.5. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
2.6. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
2.7. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
2.8. வாகனங்கள் சுத்திகரிப்பு
2.9. கோலவுடை தைத்தல்
2.10. கணணி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
2.11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
2.12. வீதி விளக்குகள் பொருத்துதல்
2.13. மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டல்
2.14. வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை
2.15. கழிவகற்றல் சேவை (Gully emptier service)
2.16. சுத்திகரிப்பு சேவை
2.17. திண்மக்கழிவு தரம் பிரித்தல்
2.18. வீதியோரம், வடிகால் பராமரிப்பு சேவை

பதிவின் பொருட்டு வியாபாரப் பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பொருட்கள் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் 14.11.2024 ம் திகதியிலிருந்து 15.12.2024 ம் திகதி வரை அலுவலக நேரத்தில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2025"** எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ / பதிவுத்தபால் மூலமோ **செயலாளர், நல்லூர் பிரதேச சபை, இல 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்கள் **18.12.2024 ம்** திகதி மு.ப 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021-222-2700 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.** (C-1575) 13.11.2024

# நாளை...

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் சுமார் 64,000 பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் தேர்தல் நடைபெறும் நாளிலும், அதற்கு மறுநாளிலும், தேவைப்பட்டால் அதற்குப் பின்னரும் பொலிஸ் அதிகாரிகளை பணியில் ஈடுபடுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தமுறை பாராளுமன்றத் தேர்தலில் சுயேட்சை குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் அடங்கலாக 690 குழுக்கள் போட்டியிடுகின்றன.

அத்துடன் 8,361 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றில் 196 உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் ஊடாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

அத்துடன் 2024 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கு அமைய, சில மாவட்டங்களில் தெரிவு செய்யப்படவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை மாறுபட்டுள்ளது.

இதற்கமைய கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தலா ஒரு வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்படவுள்ள வேட்பாளர்களில் ஒவ்வொரு வேட்பாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 18 உறுப்பினர்கள் பாராளுமன்றுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அத்துடன் கம்பஹா மாவட்டத்தில் 19 உறுப்பினர்கள் பாராளுமன்றுக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அதேநேரம் களுத்துறை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றுக்கு தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 11ஆக அதிகரித்துள்ளது.

எனினும் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைவடைந்துள்ளது. (ம-7)

# கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம்

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை மற்றும் அலுவலக வாகனங்களுக்கான வாகன சுத்திகரிப்பிற்காக 01.01.2025 - 31.12.2025 வரையான காலப் பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | சிற்றுண்டிச்சாலை | வாகனச் சுத்திகரிப்பு சேவை |
|---|---|---|---|
| 01 | படிவக் கட்டணம் | ரூபாய் 1000.00 | ரூபாய் 500.00 |
| 02 | கேள்வி வைப்பு (மீளளிப்பு) | ரூபாய் 10000.00 | ரூபாய் 10000.00 |
| 03 | படிவ விநியோகம் | 13.11.2024 - 21.11.2024 திகதிவரை | 13.11.2024 - 21.11.2024 திகதி வரை |
| 04 | விண்ணப்ப ஏற்பு | 22.11.2024 மு.ப 10.00 மணி வரை | 22.11.2024 - மு.ப 10.00 மணி வரை |
| 05 | விண்ணப்பம் திறத்தல் | 22.11.2024 மு.ப 10.00 மணி | 22.11.2024 - மு.ப 10.00 மணி |

விண்ணப்பத்தை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு (தொலைபேசி இல.021 222 2647)

வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்.

(C-1576)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை தினம் நாளை வியாழக் கிழமை காலை 9 மணி தொடக்கம் நல் லூர் கந்தன் ஆலயத் திற்கு அருகில் அமைந் துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

திருமுறைகள், நற் சிந்தனை பாடல் களைத் தொடர்ந்து, முற்பகல் 11 மணிக்கு "சிவஞானச் சித்தர் யோகர் சுவாமிகள்" எனும் நூல் பற்றிய அறி முக உரையை பேரா சிரியர் என்.சண்முக லிங்கம் நிகழ்த்த வுள்ளார். (6-8)

# அமைதியான தேர்தலை நடத்த இறுக்கமாகும் சட்டங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு




(கொழும்பு)

**அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கு கடுமையான முறையில் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் வாக்களித்ததன் பின்னர் பொது இடங் களில் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களிடம் வலி யுறுத்தியுள்ளது.**

இதேவேளை வாக்காளர் அட்டை கிடைக்கப்பெறாத வாக் காளர்கள் தமக்குரிய வாக்க ளிப்பு மத்திய நிலையத்துக்கு சென்று தமது ஆளடை யாளத்தை உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் பெறுபெறுகள் வெளியானவுடன் பொது இடங் களில் ஒன்று கூடி, பட்டாசு கொளுத்துவது சட்டத்தின் பிர காரம் குற்றச்செயலாகும் என் றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப் பட்டுள்ள உத்தியோகத்தர்கள் வாக்களிப்பு தினத்தன்று கடமைகளில் ஈடுபட வேண்டும் என்றும் கடமையில் ஈடுபடாமல் இருப்பது தண் டனைக்குரிய குற்றமாகும் என் றும் தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை தனியார் துறையில் சேவையில் ஈடு படும் வாக்காளர்கள் வாக்க ளிக்க செல்வதற்கு தொழில் வழங்குநர்கள் கட்டாயம் விடு முறை வழங்க வேண்டும் என் றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மேலும் வாக்களிப்பு மத்திய நிலையத்துக்குள் கையடக்கத் தொலைபேசியை கொண்டு செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)

# பயண எச்சரிக்கையை மீளப் பெறுமாறு வலியுறுத்து

(கொழும்பு)

மறு அறிவித்தல் வரை அறுகம்பே பிரதேசத்தில் பயணிப்பதை தவிர்க் குமாறு விடுக்கப்பட்ட பாது காப்பு எச்சரிக்கை அறி விப்பை வாபஸ் பெறுமாறு வெளிவிவகார அமைச்சு அமெரிக்க தூதரகத்திடம் கோரிக்கை விடுத்துள் ளது.

எவ்வாறாயினும் இது தொடர்பில் இலங்கையில் உள்ள அமெரிக்க தூத ரகத்திடம் இருந்து எந்த பதிலும் இல்லை என அர சாங்க தகவல்கள் தெரி விக்கின்றன.

அறுகம்பே பிரதேசத் தில் உள்ள பிரபல சுற் றுலாத் தலங்களை இல க்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக நம்ப கமான தகவல் கிடைத் துள்ளதாக கடந்த மாதம் 23ஆம் திகதி அமெரிக்க தூதரகம் தனது பிரஜை களுக்கு அறிவித்திருந் தது.

பின்னர் சம்பந்தப்பட்ட இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்த அரசு நட வடிக்கை எடுத்ததுடன், சம்பவம் தொடர்பாக 6 பேர் தற்போது காவலில் வைக்கப்பட்டு விசா ரணைகள் முன்னெடுக் கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (நி-8)

# சுமார் 64 ஆயிரம்பொலிஸார் தேர்தல் பாதுகாப்பு பணிகளில்

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பாது காப்பிற்காக நேற்று முதல் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத் தப்படவுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரி வித்துள்ளார்.

இதற்காக நாடளாவிய ரீதி யில் அமைந்துள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் சுமார் 64,000 பொலிஸ் அதி காரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மேலும், 3,200 பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகா ரிகள் கடமைக்காக தயார்படுத் தப்பட்டுள்ளனர்.

12,227 சிவில் பாதுகாப்பு பணியாளர்கள் நேரடியாக தேர் தல் பணிகளில் ஈடுபட்டுள் ளனர்.

மொத்தம் 13,314 தொகுதி களுக்கு 13,383 வாக்குச் சாவ டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுதந்திரமானதும் அமை தியானதுமான தேர்தலை நடத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு அனைவரிடமும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கேட் டுக் கொண்டுள்ளார். (நி-8)

# இணையவழி அச்சுறுத்தல் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இணையவழி குற்றச் செயல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை கணனி அவசர தயார் நிலைக் குழுவின் அதி காரி சாருகா தமுனுபொல தெரி வித்தார்.

இந்த வருடத்தில் இது வரை மொத்தம் 2,000 இணைய அச்சுறுத்தல் சம்ப வங்கள் பதிவாகியுள்ளது.

சமீபத்திய மாதங்களில் இணையவழி குற்றச் செயல்கள் தொடர்பில் 9,500 முறைப்பாடுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

இவற்றில் 981 முறைப்பாடு கள் துஷ்பிரயோகம் சம்பந்தப் பட்டவை என்பதுடன் இணை யவழி பாதுகாப்பு முறைமையே இதற்கு காரணம்.

இணையவழி அச்சுறுத் தல்கள் தவிர, இணைய மோச டிகள் சம்பந்தப்பட்ட கிட்டத்தட்ட 1,600 சம்பவங்கள் சமீப காலங்களில் பதிவாகியுள்ளன.

இவை இணையவழி குற் றச் செயல்களின் அதிகரிப்பு, டிஜிற்றல் துன்புறுத்தலைச் சமாளிக்கவும், இணையவழி பயனர்களைப் பாதுகாக்கவும் வலுவான நடவடிக்கைகளின் அவசரத் தேவையை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது.

இந்நிலையில் இலங்கை யில் இணையவழி பாதுகாப் பிற்காக அதிக விழிப்புணர்வு பிரசாரங்களுடன் மேலும் வலுவான சட்டங்கள் அவ சியமெனவும் அவர் வலி யுறுத்தினார். (நி-8)

# இலங்கை மீது இந்தியா பொருளாதார தடை விதிக்க வேண்டும்

### சீமான் வலியுறுத்து



(சென்னை)

இலங்கை மீது இந்திய அரசு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் வலியுறுத்தியுள் ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தி யாளர்களிடம் பேசியபோது அவர் இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சட்டவிரோதமாக எல்லை தாண்டி வரும் இந்திய கடற் றொழிலாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறியதை சுட்டிக்காட்டியே அவர் இந்த வலியுறுத் தலை மத்திய அரசாங் கத்திடம் விடுத்துள்ளார்.

இலங்கையில் தமிழக கடற்றொழிலாளர்கள் துப் பாக்கி சூட்டுக்கு உள்ளாகி யுள்ளனர். மேலும் அவர் களின் வலைகள் அழிக் கப்பட்டுள்ளன என்றும் சீமான் குறிப்பிட்டுள்ளார். (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுச் செய்திகள்

# டோனிக்காக சி.எஸ்.கே.வின் கதவுகள் திறந்தே இருக்கும்

டோனி விளையாட விரும்பும் வரை சி.எஸ்.கேவின் கதவுகள் திறந்தே இருக்கும். அவர் எப்போதும் சரியான முடிவை எடுப் பார் என சி.எஸ்.கே அணியின் CEO காசி விஸ்வநாதன் தெரிவித்தார்.

சிஎஸ்கே




முன்னாள் வீரர் அம்பத்தி ராயுடுவுடனான தனியார் ஊடக நிகழ்ச்சியொன்றில் டோனி குறித்துப் பேசிய காசி விஸ்வநாதன் டோனி எல்லாவற்றையும் தனக்குள்ளேயே வைத்திருப்பார் என்று உங்களுக்கே தெரியும். கடைசி நேரத்தில் மட்டும்தான் அது என்னவென்று வெளிவரும்..

தன்னுடைய கடைசிப் போட்டி சென்னையில்தான் என்று அவரே நேர்காணல் ஒன்றில் கூறியிருக்கிறார். சி.எஸ்.கே-வைப் பொறுத்தவரை அவர் தொடர்வார் என்று நாங்கள் நம்புகிறோம். டோனி விளையாட விரும்பும் வரை சி.எஸ்.கே-வின் கதவுகள் திறந்தே இருக்கும். அவர் எப்போதும் சரியான முடிவை எடுப்பார் என்று கூறினார்.

ஆர்.சி.பி அணியுடனான கடைசி லீக் போட்டியில் சி.எஸ்.கே தோல்வியடைந்து பிளே ஆஃப் சுற்றுக்கு தகுதி பெற முடியாமல் போனது.

இதனால் அடுத்த சீசனில் டோனி விளையாடுவாரா என்ற எதிர்பார்ப்பு மீண்டும் ரசிகர்களிடம் தொற்றிக்கொண்டது.



காசிவிஸ்வநாதன்

அந்த எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில், ஐ.பி.எல் நிர்வாகம் கொண்டுவந்த Uncapped Player விதிமுறையால் அடுத்த சீசனுக்கு டோனியை ரூ. 4 கோடிக்கு சி.எஸ்.கே அணி தக்கவைத்துக் கொண்டது.

இதற்கிடையில் தான் அடுத்தாண்டு ஐ.பி.எல் விளையாடுவது குறித்து ஹின்ட் கொடுத்த டோனி இன்னும் சில ஆண்டுகள் கிரிக்கெட்டை மகிழ்ச்சியுடன் விளையாட விரும்புவதாக ஒரு நிகழ்ச்சியில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3257

### ரிதுஷா




### எட்வின்




### சாந்தன்




### சயந்தன்

பச்சோந்தி தனது உணவிற்காக மட்டுமே நிறம் மாறும்

மனித இனம் அப்படி அல்ல எதற்காகவும் எப்போது வேண்டுமானாலும் தனது மனதை மாற்றிக் கொள்ளும்

கவனமாய் வாழ்வது பச்சோந்திகளிடம் அல்ல மனிதர்களிடம்

### அகல்யா




### ஹர்ஜெனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆர்.டி.பி வங்கி தலைவராக வசந்த பெர்னாண்டோ



(கொழும்பு)

ஆர்.டி.பி வங்கியின் (R.D.B) 9 ஆவது தலைவராக வசந்த பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1 ஆம் திகதி அவர் தனது கடமைகளை பொறுப்பேற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(நி-8)

# வட்டவளையில் விபத்து

## சாரதி படுகாயம்

(ஹற்றன்)

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தும் வானொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் வானின் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

ஹற்றனில் இருந்து கொழும்பு பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந் தமான பேருந் துக்கு எதிர் திசையில், கினிகத்ஹேனவில் இருந்து ஹற்றன் நோக்கி அதிவேகத்தில் பயணித்த வான், முன்பாக பயணித்த ஓட்டோவை முறைகேடான முறையில் முந்திச் செல்வதற்கு முயன்றபோதே எதிரே வந்த பேருந்துடன் மோதியதில் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

ஹற்றன் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(நி-8)


## வாடகைக்கு

நாவலர் வீதியில் யாழ்ப்பாணத்தில் இரண்டு பெண்கள் வசிக்கக் கூடிய அனெக்ஸ் (வீட்டின் பகுதி) வாடகைக்கு உண்டு.

077 788 7360

(சி-2487)

## லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(533)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

01. வலிதெற்கு பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் அலுவலக உபகரணங்களினை கொள்வனவு மேற்கொள்வதற்கு பிரதேச சபையின் பெறுகைகள் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| பெறுகை இலக்கம் | விபரம் | தொகை | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சிவல் செலவு (மில்..ரூபாவில) | வேண்டப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/15/03/05/ Photo Copy colour/2024 | Photo Copy Colour | 02 | 2.0 | 20000.00 | 12.02.2025 |
| NP/14/41/15/03/05/ Laptop/2024 | Laptop | 05 | 2.0 | 20000.00 | 12.02.2025 |
| NP/14/41/15/03/05/ Tap/2024 | Tap | 04 | 0.5 | 5000.00 | 12.02.2025 |
| NP/14/41/15/03/05/ Mulari Media Projector /2024 | Mulari Media Projector | 02 | 0.3 | 3000.00 | 12.02.2025 |

02. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
03. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகையொன்றை செயலாளர் வலிதெற்கு பிரதேசசபை காங்கேசந்துறை வீதி மருதனார்மடம் சுன்னாகம் (தொலைபேசி இலக்கம் 021 224 0017, தொலைநகல் - 021 224 0327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024 நவம்பர் 13ஆம் திகதியிலிருந்து 2024 நவம்பர் 26ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையில் சமர்ப்பித்து ஒவ்வொரு விண்ணப்பங்களுக்கும் ரூபா 1000.00 வீதம் மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
04. தகுதியான கேள்விதாரர் தற்பொழுதும் செல்லுபடியாகவுள்ள வடக்குமாகாணத்திற்குட்பட்ட வியாபாரச்சான்றிதழுடன், கறுப்புப் பட்டியலில் தமது பெயர் வராதவராக இருத்தல் வேண்டும்.
05. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி ii இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
06. வலிதெற்கு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் 2024 நவம்பர் 21ஆம் திகதி அன்று மு.ப. 11.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
07. 2024 நவம்பர் 27ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் **"தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக்குழு வலிதெற்கு பிரதேசசபை சுன்னாகம்"** எனும் முகவரியில் கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அட்டவனையில் வழங்கப்பட்ட தகவல் பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
08. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகைளை எந்தவொரு நிலையிலும் விலைமனுக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு திணைக்களப் பெறுகைகள் குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுண்டு.

13.11.2024 (சி-1572)

**தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைக்குழு,**
**வலிதெற்கு பிரதேச சபை சுன்னாகம்.**

# இராசிபலன்

13.11.2024
ஐப்பசி 27, புதன்கிழமை
துவாதசி முற்பகல் 10.31 மணிவரை

ரேவதி பின்னிரவு 1.52 மணிவரை
சுபநேரம் 4.37-6.07 மணிவரை
இராகுகாலம் 12.07-1.37 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்: மகம், பூரம்

**வளவன்**

**மேஷம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, தொழில் ரீதியான அலைச்சல்கள் உருவாகும்.

**ரிஷபம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உற்சாகமான நாள்.

**மிதுனம்** மனநிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள் போசன சுகமுண்டு.

**கடகம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், புதிய முயற்சிகளை யோசித்துச் செய்வது நல்லது.

**கன்னி** கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலன் சீராகும், போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், உற்சாகத்தோடு செயற்படும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், செல்வ நிலை உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மீனம்** வழிபாடு ஆனந்தம் தரும், போசன சுகமுண்டு, சிந்தனை மிகுதியான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்வம் மூடனிடம் போனால் ஒரு நிமிடத்தில் சிதறிப் போகும்.**

# எல்லை தாண்டிய மீன்பிடி 12 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களும் மயிலிட்டி கடற்கரை முகாமில் தடுத்துவைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும்,

விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்து, நீதிமன்றத்தில் வழக்கு தொடரவுள்ளதாக நீரியல் வளத்துறை மற்றும் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (6-8)



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியின் திரை இசைப்பாடல் போட்டியில் யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலய மாணவர்கள் 2 ஆம் இடத்தினை பெற்றுள்ளனர்.

# கேள்வி அறிவித்தல்
# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

## அபிவிருத்தி ஒதுக்க நிதி, சபை நிதி -2024 கட்டம் V

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளை கோருகின்றார்கள்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் SBD -03 இல் தரவு அட்டவணை (Schedule) இலும் SPD – 01 இல் Bidding Data இலும் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2024.11.13 ஆம் திகதியிலிருந்து 2024.11.26 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக தொடர் இலக்கம் 03 இற்கு உரிய வேலைக்கு ரூபா. 6,000.00 உம் ஏனைய வற்றிற்கு ரூபா. 3,000.00 உம் (வரிநீங்கலாக) உம் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம், பிரதி) பூரணப்படுத்தி **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு **2024.11.27 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.** பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2024.11.21 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/CF-V/2024/01 | தலைமை அலுவலகத்தில் களஞ்சிய அறை அமைத்தலும், அலுவலக திருத்த வேலைகளும் | 7.10 | 84 நாட்கள் | C7 & C6 கட்டடம் | 77 நாட்கள் | 110,000.00 | 2025.03.11 |
| 2. | NPS/CF-V/2024/02 | கொக்குவில் சுற்றுச்சூழல் முகாமைத்துவ கண்காணிப்பு நிலையத்தில் பாதுகாப்பு குடில் அமைத்தலும் நீர்த்தாங்கி அமைத்தலும் உட்புற வீதி அமைத்தலும் | 3.30 | 84 நாட்கள் | C8 & C7 கட்டடம், வீதி | 63 நாட்கள் | 50,000.00 | 2025.02.25 |
| 3. | NPS/CF-V/2024/03 | கொக்குவில் சுற்றுச்சூழல் முகாமைத்துவ கண்காணிப்பு நிலையத்தில் வாகன தரிப்பிடங்கள் அமைத்தல். | 13.60 | 84 நாட்கள் | C6 & C5 கட்டடம் | 77 நாட்கள் | 210,000.00 | 2025.03.11 |
| 4. | NPS/CF-V/2024/04 | கொட்டைக்காடு மயான வீதி புனரமைத்தல். | 2.46 | 84 நாட்கள் | C8 & C7 வீதி | 63 நாட்கள் | 37,000.00 | 2025.02.25 |
| 5. | NPS/CF-V/2024/05 | காரைமுனங்கு திண்ம கழிவகற்றல் மையத்தில் பாதுகாப்பு குடில் அமைத்தலும், தொழிலாளிகளுக்கான ஓய்வறை அமைத்தலும் | 3.95 | 84 நாட்கள் | C8 & C7 கட்டடம் | 63 நாட்கள் | 60,000.00 | 2025.02.25 |
| 6. | NPS/CF-V/2024/06 | காரைமுனங்கு திண்ம கழிவகற்றல் மையத்தில் வாகன தரிப்பிடம் அமைத்தல். | 6.20 | 84 நாட்கள் | C7 & C6 கட்டடம் | 77 நாட்கள் | 93,000.00 | 2025.03.11 |
| 7. | NPS/CF-V/2024/05 | அரியாலையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்களை அமைத்தல். | 9.13 | 84 நாட்கள் | C7 & C6 கட்டடம் | 77 நாட்கள் | 137,000.00 | 2025.03.11 |
| 8. | NPS/CF-V/2024/05 | சித்துபாத்தி மயானத்தில் எரிகொட்டகை அமைத்தல். | 5.43 | 84 நாட்கள் | C7 & C6 கட்டடம் | 77 நாட்கள் | 81,500.00 | 2025.03.11 |

2024.11.13

(சி-1574)

தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல்-2024

## வாசகர்களின் கருத்துக் கணிப்பு

- **யாழ்ப்பாணம்- கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்**
- **வன்னித் தேர்தல் மாவட்டம்**

1. மேற்குறித்த இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் கட்சிகள் அல்லது சுயேட்சைக்குழுக்கள் பெற்றுக் கொள்ளும் ஆசனங்கள்.

2. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பெயர்களை தனித்தனி தேர்தல் மாவட்டங்களாக (யாழ்ப் பாணம், வன்னி) குறிப்பிட்டு வலம்புரி நாளிதழின் **076 097 3128** எனும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்**

கருத்துக் கணிப்பை அனுப்புபவர்கள்
**முழுப்பெயர், முகவரி,**
**தே.அ.அ.இல.**
**தொ.பே.இல**
**பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம்**
ஆகிய விபரங்களை உள்ளடக்குவதுடன் ஒருவர் ஒரே மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக் கணிப்புக்களை முன்வைக்க முடியாது என்பதையும் 16 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் இக் கருத்துக்கணிப்பில் பங்குபற்ற முடியும் என்பதையும் கவனத்தில் கொள்க.

**முக்கிய குறிப்பு**

மிகச் சரியான கணிப்பை அனுப்பி வைத்தவர்களின் பெயர் விபரம் அவர்களின் புகைப்படங்களுடன் வலம்புரியில் வெளியிடப்படும்.

மிகச் சரியான கணிப்பை வெளிப்படுத்தியவர்களில் குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள் தீர்மானிக்கப்படுவர்.

கருத்துக் கணிப்பை அனுப்புவதற்கான இறுதிநாள் **13.11.2024** நள்ளிரவு 12 மணி

**நிர்வாகம், வலம்புரி.**


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்:மூலம்
உயரம்:5'4" 1இல் செவ்
தகைமை/தொழில்: B.Com, Junior Executive
எதிர்பார்ப்பு: உத்தியோகம்,பட்டதாரி
தொ.இ: B/14911

பிறப்பு:1980 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்:5'8"
தகைமை/தொழில்:Bsc,MSc ,Retail Manager(London),மனைவி இறப்பு
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்
தொ.இ: B/14912

பிறப்பு:1996 இந்து ,RC
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி.பா: 10 1/2
உயரம்:6
தகைமை/தொழில்: A/L, Manager (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14913

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி 12இல் செவ்
கி.பா: 35 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, Diploma
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/14925

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா: 30 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்:Bsc ,Software Engineer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்,வெளிநாடு
தொ.இ: G/14930

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி.பா:37
உயரம்:5'4"
தகைமை/தொழில்-BA
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்: business
தொ.இ: G/14936

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# பெறுகை அறிவித்தல்

## வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை-கரவெட்டி

**2025 ஆம் ஆண்டுக்கான சேவைகளுக்கான விலைமனுக் கோரல்**

தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை பெறுகைக்குழு அவர்களினால் 2025ஆம் ஆண்டுக்கான பின்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுடைய சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| இல | சேவையின் வகை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|
| | | | கேள்விப் பிணைத்தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | சுத்திகரிப்பு சேவை | 20 | 25000.00 | 2024.12.01 - 2025.03.01 |
| 02 | சாரதி சேவை | 03 | 25000.00 | 2024.12.01 - 2025.03.01 |
| 03 | பாதுகாப்புச்சேவை | பகல் - 07<br>இரவு - 07 | 25000.00 | 2024.12.01 - 2025.03.01 |

1. சுத்திகரிப்பு சேவை வழங்குநர் வியாபாரப்பதிவுடையதான ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் சேவையை குறித்த துறையில் வழங்கியமைக்கான அனுபவச் சான்றிதழ் உள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.
2. சாரதிசேவை வழங்குநர் வியாபாரப் பதிவுடையதான ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், குறைந்தது 3 ஆண்டுகள் சேவையை குறித்த துறையில் வழங்கியமைக்கான அனுபவச் சான்றிதழ் உள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.
3. தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குநர் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதிவாய்ந்ததான ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் சேவையை வழங்கியமைக்கான அனுபவச் சான்றிதழ் உள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.
4. கடமை நேரம் பகல் 06:00 மணியிலிருந்து 18:00 மணிவரையும், இரவு 18:00 மணியிலிருந்து 06:00 மணிவரையும் ஆகும்.
5. எமது சபைக்கு சொந்தமான ஆளுகைப் பிரதேசத்தில் எந்த வளாகத்திலும் பணியாற்றக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
6. ஆளணி எண்ணிக்கையானது தேவைக்கு ஏற்றபடி மாற்றம் ஏற்படுத்தப்படும் போது அத்தீர்மானத்திற்கு கட்டுப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
7. குறித்த அளவுடைய மனித வலுவினை இடையுறாது வழங்குவதை உறுதி செய்யவேண்டும்.
8. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
9. சேவை வழங்குநர்கள் மேற்படி சேவைகளுக்கு எமது அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் பெறுகை ஆவணங்களை தனித்தனியாகப் பெற்று வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை கரவெட்டியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 2024.11.13 தொடக்கம் 2024.11.22 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ 2000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
10. பெறுகை ஆவணங்கள் 01.12.2024ஆம் **திகதி மு.ப 10.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "**செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்ட மூடிய பெட்டியில் இடுதல் வேண்டும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் சேவையின் பெயரைக்குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
11. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்க உரித்து உள்ளது.

(சி-1570)

செயலாளர், பெறுகைக்குழு, வடமராட்சி,
தெற்குமேற்கு பிரதேசசபை,கரவெட்டி.
2024.11.12


# வேலை வாய்ப்பு

NO.198 கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS (PVT) LTD AIR TICKETING அலுவலகத்திற்கு அனுபவ முள்ளவர்கள் (Sabre System தெரிந்தவர்கள் ) விரும்பத்தக்கது/ அனுபவமற்றவர்களுக்கு: Training கொடுக்கப்படும்.

தொடர்புக்கு :- 021 222 8555
076 691 1082
077 108 3482
மின்னஞ்சல்:- sbtravels99@yahoo.com

(சி-1569)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பொங்கலுக்கு பலூன் திருவிழா



(டில்லி)

உலகின் பல்வேறு நாடுகளில் பலூன் திருவிழா நடத்தப்படுகிறது. இந்தியாவை பொறுத்தவரை ஆந்திராவின் அரக்கு வேலி மற்றும் தமிழகத்தில் பொள்ளாச்சியில் பலூன் திருவிழா நடத்தப்படுகிறது.


பொள்ளாச்சி பலூன் திருவிழாவிற்கு சர்வதேச அங்கீகாரம் உண்டு. கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அங்கு சர்வதேச பலூன் திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. கடந்தாண்டு நடந்த பலூன் திருவிழாவில் 11 நாடுகள் பங்கொண்டன.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு (2025) பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை சென்னை, கோவை, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் பலூன் திருவிழா நடத்தப்பட உள்ளது.

சென்னையில் எங்கு நடைபெறும் என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பகுதியிலும் எப்போது பலூன் திருவிழா நடைபெறும் திகதியை தமிழக அரசு விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பலூன் திருவிழாவிற்கான ரீசரும் வெளியிடப்பட்டுள்ளது. (நி-8)

## இந்தியாவுடன் கைகோர்க்கும் ரஷ்யா



(டில்லி)

ரஷ்யாவில் 8,000 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட 2 போர்க்கப்பல்கள் விரைவில் இந்திய கடற்படையில் இணைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ரஷ்யாவில் 2 போர்க்கப்பல்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வெள்ளோட்டமும் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் போர்க்கப்பல் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் டிசம்பரில் ரஷ்யாவுக்கு சென்று புதிய போர்க்கப்பலை இந்திய கடற்படையில் இணைக்கவுள்ளார் எனவும் இதற்கு ஐ.என்.எஸ் துஷில் எனப் பெயரிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# உடைக்கப்பட்

# பற்றி எரியும்

(பெய்ரூட்)

**பேஜர்களின் வெடிப்புக்கு இஸ்ரேல் தான் காரணம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு பகிரங்கமாக ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இஸ்ரேல் மீது ஏவுகணைகளை பொழிந்தது ஹிஸ்புல்லா அமைப்பு.**

இத் தாக்குதல் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது லெபனானில் கடந்த செப்ரெம்பர் 17 ஆம் திகதி ஹிஸ்புல்லா கிளர்ச்சி அமைப்பு உறுப்பினர்களின் பாக்கெட்டுகளில் இருந்த தொலைத்தொடர்பு கருவியான பேஜர்கள் அடுத்தடுத்து வெடித்துச் சிதறின.

இந்த டெக்னிக்கல் தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம் என்று யூகிக்க முடிந்தாலும் இதுபற்றி அந்நாடு வாய் திறக்காமல் இருந்தது.

ஆனால் அந்த தாக்குதலுக்கு ஒப்புதல் வழங்கியதே தான்தான் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தற்போது பொதுவெளியில் பகிரங்கமாக தெரிவித்தார்.

இதனால் மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் இஸ்ரேலிய பகுதிகள் மீது ஹிஸ்புல்லா சரமாரியாக நடத்திய ரொக்கெட் தாக்குதல் நிலைமையை மோசமாகியுள்ளது.

லெபனானில் இருந்து ஏவப்பட்ட சுமார் 165 ரொக்கெட்டுகள் வடக்கு இஸ்ரேலில் உள்ள ஹைபா பே பகுதியில் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளின் மேல் பாய்ந்தது.

இந்தத் தாக்குதலில் 1 வயது பெண் குழந்தை, 27 வயது பெண், 35 வயது ஆண் உட்பட மொத்தம் 7 பேர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளது. 80 ரொக்கெட்டுகளை இஸ்ரேல்

## போரை தீவிரப்படுத்த வேண்டாம்!

### புடினிடம் ட்ரம்ப் வலியுறுத்து





(வோஷிங்டன்)

உக்ரைன் உடனான போரை மேலும் தீவிரப்படுத்த வேண்டாம் எனவும் போரை கைவிடுமாறும் ரஷ்ய ஜனாதிபதி புடினை, டொனால்ட் ட்ரம்ப வலியுறுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான தொலைபேசி உரையாடலின் போதே ட்ரம்ப் இதனைத் தெரிவித்துள்ளார். உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர பல்வேறு நாடுகளும் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப், தனது தேர்தல் பிரசாரத்தின் போது, தான் வெற்றி பெற்றால் உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என கூறி இருந்தார்.

அதன்படி தற்போது ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ள நிலையில், அவர் போரை நிறுத்த முயற்சிகள் எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிற சூழலிலேயே டொனால்ட் ட்ரம்ப் ரஷ்ய ஜனாதிபதி புடினைத் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார். இதேவேளை ட்ரம்புக்கும் புடினுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து தங்களுக்கு முன் கூட்டியே தெரிவிக்கப்படவில்லை என்றும் இதனை ஏற்கவோ அல்லது எதிர்க்கவோ முடியாது என உக்ரைனின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ட்ட ரகசியம்
# ...ம் இஸ்ரேல்!



வான் பாதுகாப்புப் படை இடைமறித்து அளித்ததால் பெரிய அளவிலான சேதம் தவிர்க்கப்பட்டது. மீதமுள்ள ரொக்கெட்டுகள் திறந்த வெளிகளில் விழுந்தன.

கியாத் அடா பகுதியில் வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

ஹைபா பகுதியில் இதுவரை நடத்தப்பட்ட தாக்குதலில் இதுவே பெரிய அளவிலானது என்று அறிக்கை வெளியாகி உள்ளது.

மேலும் ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதால் இஸ்ரேல் இராணுவம் அலர்ட்டில் உள்ளது.

தற்போதைய தாக்குதல் குறித்து கூறியுள்ள இஸ்ரேல் இராணுவம் ஹிஸ்புல்லா இந்த ரொக்கெட்டுகளை ஏவ பயன்படுத்திய லான்சர்களை ட்ரோன் தாக்குதல் மூலம் அழித்து விட்டதாகத் தெரிவித்துள்ளது. (நி-8)

## காலநிலை உச்சி மாநாடு அசர்பைஜானில் ஆரம்பம்



(அசர்பைஜான்)
ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்திர காலநிலை உச்சி மாநாடு ஆரம்பமாகியுள்ளது. COP 29 என அழைக்கப்படும் இந்த மாநாடு தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு நடைபெறவுள்ளது.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடான அசர்பைஜானின் தலைநகரான பாக்குவில் நடைபெறும் இந்த ஒன்று கூடலில் சுமார் 200 உலக தலைவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

எதிர்காலத்தில் சர்வதேசத்திற்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்து உலக தலைவர்கள் விரிவாக விவாதிப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகக் கடந்த 2015 பாரிஸ் ஒப்பந்தத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 1.5 சென்றிகிரேட் வெப்பநிலை உயர்வைக் கட்டுப்படுத்த நாடுகள் எவ்வாறு திட்டமிடுகின்றன என்பது குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்பது வருடங்களுக்கு முன்னர், இடம்பெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் சட்டபூர்வ சர்வதேச ஒப்பந்தம் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைய 2 சென்றி கிரேட்டிற்கு குறிப்பாக 1.5 சென்றி கிரேட் ஆக வைத்திருக்க இணக்கம் காணப்பட்டது. அதேவேளை ஐக்கிய நாடுகளின் உலக வானிலை அமைப்பு 2024 ஆம் ஆண்டு உலகின் வெப்பமான ஆண்டாகப் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் உலக சராசரி வெப்பநிலை 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்ததை விட 1.54 சென்றிகிரேட்டினால் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. (நி-8)

## ஈரான் அணுசக்தி நிலையங்களை குறி வைக்கும் இஸ்ரேல்



(ஜெருசலேம்)
இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள இஸ்ரேல் காட்ஸ் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தாக்குதலுக்கு உள்ளாகும் சூழலில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் இஸ்ரேல் ஈரான் இடையே பதற்றமான சூழல் நிலவி வருவது உலகமே வியந்து பார்க்கும் அளவிற்கு தீவிரமடைந்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு யாரும் எதிர்பார்க்காத வகையில் இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் யோவ் கேலன்ட் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக இஸ்ரேல் காட்ஸ் என்பவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் ஆரம்பத்திலேயே அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் இஸ்ரேல் இராணுவத்தின் உயர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பொன்றில் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குத் தாக்குதலுக்கு உள்ளாகும் சூழலில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். குறித்த பதிவில் "இன்று எனது முதல் சந்திப்பில் இராணுவ ஜெனரல் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினேன்.

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக ஆபத்தில் இருக்கிறது. இதன் மூலம் எங்களின் மிக முக்கியமான இலக்கை, அதாவது இஸ்ரேல் இருப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதை அகற்றும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.

ஈரான் இப்போது வரை ஒரு அணு ஆயுத நாடு இல்லை.ஆனால், கடந்த பல ஆண்டுகளாகவே ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்க முயல்வதாக இஸ்ரேல் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது. இருப்பினும் ஈரான் இதைத் தொடர்ந்து மறுத்தே வருவது குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளிமண்டலவியல் திணைக்களத்தின்

# இணையத்தளம் மீது சைபர் தாக்குதல்

(கொழும்பு)

வளிமண்டலவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீது சைபர் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இணையத்தளத்திற்கான அணுகல் தடை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கணனி அவசர பதில் சங்கம் தெரிவித்துள்ளது.

அதனை கூடிய விரைவில் மீளமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருகா தமுனுபொல தெரிவித்தார். (நி-8)

# இலங்கைக்கு வருகிறார் அமெரிக்க சிறப்பு தூதர்



(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலக இளையோர் பிரச்சினைகளுக்கான சிறப்பு தூதர், அபி பின் கெனவர் இலங்கை மற்றும் நேபாளத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையில் அமெரிக்க தூதரகம் மற்றும் இலங்கையின் கூட்டுறவின் மூலம் கல்வி, தலைமைத்துவம் மற்றும் குடியுரிமை, பங்கேற்பு போன்ற துறைகளில் இளம் தலைவர்களை ஊக்குவிக்கும் திட்டங்களின் தாக்கத்தை சிறப்புத் தூதர் பின்கெனவர் இந்த விஜயத்தின் போது அவதானிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய இளையோர் தலைவர்களுடன் கூட்டுறவை அதிகரித்து உலகளாவிய இளையோர் பிரச் சினைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலக இளையோர் பிரச்சினைகளுக்கான சிறப்பு தூதர் அபி பின் கெனவரின் விஜயத்தின் நோக்கமாகும். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 250 | 500 | 350-400 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 350 | 200-270 | 250 |
| தக்காளி | 250 | 300 | 300 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 240 | 100-150 | 250 |
| கோவா | 180 | 200 | 250 | 260 | 250 |
| கரட் | 150 | 150 | 250 | 140 | 250 |
| பூசணி | 100 | 100 | 280 | 90 | 150 |
| புடோல் | 150 | 180 | 120 | 250 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 150 | 60-80 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 400 | 250 | 250 | 300 | 300 |
| பாகற்காய் | 450 | 550 | 450 | 500 | 800 |
| வெண்டக்காய் | 100 | 100 | 120 | 60-80 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 | 150-200 | 300 |
| லீக்ஸ் | 180 | 300 | 250 | 270 | 300 |
| பீற்றூட் | 120 | 450 | 180 | 100 | 200 |
| கறிமிளகாய் | 450 | 550 | 600 | 400-450 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 250 | 400 | 200-250 | 400 |
| போஞ்சி | 350 | 450 | 450 | 350-400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 400 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 180 | 150 | 120 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 400 | 500 | 400 | 500-550 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-150 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 550 | 1600 |
| வெங்காயப்பூ | 400 | 450 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 60 | [illegible] | 200 |

# இன்று ஒரு தகவல் 262



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# ஞானம்

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவிற்கு ஒரு ராணி. அவர்கள் அரண்மனைக்கு புகழ்பெற்ற ஞானிகள் எல்லாம் வருவது வழக்கம்.

அவர்களுடைய உபதேசங்களையெல்லாம் அந்த ராணி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். அதனுடைய விளைவு. அவரும் ஒரு ஞானி ஆகிவிட்டார்.

ஞானி மட்டுமில்லை. தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டு ஆகாயத்திலே பறக்கின்ற சித்தி அவருக்குக் கிடைத்து விட்டது. நினைத் தால் பறக்கலாம். அப்படிப்பட்ட சக்தி வந்து விட்டது.

ராஜா பார்த்தார் உடனே ராணியிடம் போனார். இதோ பார் நானும் உன்னை மாதிரி ஞானி ஆக வேண்டும். எனக்கும் ஏதாவது உபதேசம் செய் என்று கேட்டுக் கொண்டார்.

நீங்கள் ஞானி ஆக வேண்டும் என்றால் எல்லாவற்றையும் துறக்க தயாராக இருக்க வேண்டும். எல்லாவற்றையும் விடுவதற்கான வைராக்கியம் இன்னும் உங்களுக்கு வரவில்லை என்றார் ராணி. சரி என்று பேசாமல் விட்டுவிட்டார் ராஜா.

சிறிது காலம் போனது. அந்த ராஜா காட்டிற்கு போய் தவம் செய்ய வேண்டும் என ஆசைப்பட்டார். ஆனால் ராணிக்கு அதில் விருப்பமில்லை. அதனாலே அவர் சம்மதிக்கவில்லை.

ராஜா பார்த்தார் அவருக்கா வழி தெரியாது. அவர் சொல்லாமல் ஒரு நாள் இரவு புறப்பட்டு காட்டிற்குப் போய்விட்டார்.

ராணி பார்த்தார். அது தான் ஆகாயத்திலே பறக்கின்ற சக்தி அவருக்கு கிடைத்து விட்டது. இளம் முனிவர் மாதிரி தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண் டார். புறப்பட்டுப் போனார் காட்டிற்கு. ராஜா எங்கே இருக்கின்றார் என தெரிந்தது.

நேராக ராஜா முன்னாலே போய் இறங்கினார் அந்த இளம் முனிவர். அது தான் அந்த ராணி.

ராஜா தன் எதிரிலே இளம் முனிவரைப் பார்த்தார். வணங்கினார். நான் நீண்ட காலமாக தவம் செய்கின்றேன். ஆனால் மனநிம்மதி இன்னும் எனக்கு கிடைக்கவில்லை. தாங்கள் தான் அருள் புரிய வேண்டும் என்றார்.

அதற்கு அந்த இளம் முனிவர். எல்லாவற்றையும் துறக்க வேண்டும் என்று உங்கள் மனைவி ஒரு சமயம் உபதேசம் செய்தாளே! அதன் பிரகாரம் எல்லாவற்றையும் விட்டுவிட்டீர்களா என்று கேட்டார்.

எல்லாவற்றையும் விட்டுவிட்டேன். இன்னும் இந்த ஆச்சிரமத்தை தான் துறக்கவில்லை என்று சொல்லிக் கொண்டே அந்த ராஜா ஆச்சிரமத்திலே இருந்த ஒவ்வொரு பொருளாக எடுத்து அக்கினியிலே போட்டார்.

இப்போது போடுகின்றீர்களே இந்தப் பொருள் எல்லாம் உங்களுக்கு சொந்தம் இல்லையே இவையெல்லாம் பிரகிருதிக்கு அல்லவா சொந்தம் என்றார் இளம் முனிவர்.

சரி அப்படி என்றால் என்னுடைய உடம்பை நான் துறக்கின்றேன் என்றார் ராஜா. இப்படி சொல்லிவிட்டு நெருப்பிலே குதிக்கப்போனார் ராஜா. இளம் முனிவர் ராஜாவை உடனே தடுத்துநிறுத்தி விட்டார்.

உடம்பு உங்களுக்குச் சொந்தம் இல்லையே அதெல்லாம் பஞ்ச பூதங்களுக்கு அல்லவா சொந்தம் என்றார்.

ராஜா யோசித்தார். அப்படி என்றால் எனக்கு என்ன தான் சொந்தம் என்றார்.

உங்கள் அகங்காரம் தான் உங்களுக்குச் சொந்தம். நீங்கள் துறக்க வேண்டியது அதைத்தான். அதை விடுங்கள் முதலிலே. அது உங்களிடம் இருப்பதனாலே தான் இந்த உலகமே உங்களிடம் இருப்பதாக நினைக்கின்றீர்கள்.

அகங்காரம் இருப்பதனாலே தான் இந்த உலகப் பொருட்கள் எல்லாம் எங்களுக்கு சொந்தம் என்று தோன்றுகின்றது என்று இளம் முனிவர் உருவத்திலே இருந்த ராணி சொன்னார்.

உடனே என்னிடம் இருக்கின்ற அகங்காரத்தை விட்டுவிட்டேன் என்றார் ராஜா. அதன்பின் தான் அந்த ராஜாவும் ஞானி ஆனார். ராணிக்கு கிடைத்தது மாதிரி சக்தி அவருக்கும் கிடைத்தது.


இந்தக் கதையை மிகவும் தீவிரமாக ஒருவரிடம் சொல்லிக் கொண்டு இருந்தேன். அவர் உடனே சொன்னார். சித்தியடைய வேண்டும் என்பதற்காக அந்த ராஜா எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக்கிறார்.

நான் கூட சித்தி அடைந்திருக்கின்றேன். ஆனால் இவ்வளவு கஷ்டப் படவில்லை என்றார். உங்களுக்கு சுலபமாக சித்தி கிடைத்ததற்கு யார் காரணம் என்று கேட்டேன்.

எங்கள் அப்பா தான் காரணம். அவர் இரண்டாவதாக ஒரு திருமணம் செய்தார். உடனே வீட்டிற்கு சித்தி வந்து விட்டார்கள். எனக்கு சித்தி கிடைத்த கதை இது தான் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கசிப்புடன் கைது



(தருமபுரம்)

விசுவமடு பகுதியில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி பயணித்த பேருந்தில் 26 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தருமபுரம் பொலிஸாருக்கு நேற்றைய தினம் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைவாக பேருந்தை சோதனையிட்ட பொழுது சூட்சுமமான முறையில் பயணப் பொதியில் மறைத்து கொண்டு செல்லப்பட்ட முற்பட்ட 26 லீற்றர் கசிப்பினை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் தடயப் பொருட்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (6-8-316)

# வைப்பிலிடப்பட்டது

## பெரும்போகத்திற்கான பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் பெரும் போகத்திற்கான முதற்கட்ட கொடுப்பனவாக 127.191 மில்லியன் ரூபாய் நிதி வைப்பிலிடப்பட்டுள்ளது

2024/2025 பெரும்போக பயிர் செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கான உரமானியத்திற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறது

அந்த அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் போக நெற்செய்கை மேற்கொண்டுள்ள 9064 விவசாயிகளுக்கு முதற் கட்டமாக 127.191 மில்லியன் ரூபாய் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

பூநகரி, இராமநாதபுரம், புளியம் பொக்கணை, பரந்தன், கண்டாவளை, முழங்காவில், பளை, கிளிநொச்சி ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழ் உள்ள குறித்த செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கே வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)



# எனது 34 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

## சோழியபுரம் பத்ம வெளியீடு

### அரசியல் போராட்டமா? ஆயுதப் போராட்டமா? ஆன்மீகப் போராட்டமா? வெல்லப் போவது எது?

என் அன்பு உள்ளங்களே!

இந்த மனித உலகிலே 4 வகையான போராட்டங்களை நாம் காணுகின்றோம்.

1. அரசியல் போராட்டம்
2. அகிம்சைப் போராட்டம்
3. ஆயுதப் போராட்டம்
4. ஆன்மீகப் போராட்டம்

**அரசியல் போராட்டம்**

அரசியல் என்பது மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு கொள்கை ஆகும். அரசியல் அமைப்பு என்பது எல்லாச் சமூகங்களினாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் வழிமுறையில் வரையறுக்கும் ஒரு கட்டமைப்பு ஆகும். இவை காரணமாக எழுகின்ற அரசாட்சி சம்பந்தமான போராட்டமே அரசியல் போராட்டம் என்பதாகும்.

**அகிம்சைப் போராட்டம்**

ஒரு தேசிய இனம் தனது அடிப்படையான சம உரிமைகளையும் விடுதலைக்கான அபிலாசைகளையும் பெற்றுக்கொள்வதற்கான ஜனநாயக வழிமுறையிலே அமைதியாக நடாத்தப்படும் போராட்டமே அகிம்சைப் போராட்டம் எனப்படும்.

**ஆயுதப் போராட்டம்**

ஒரு தேசிய இனம் அகிம்சைப் போராட்டத்தில் வெற்றி காணாத போது தமது இன விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடும் போராட்டமே ஆயுதப் போராட்டம் என்பதாகும்.

**ஆன்மீகப் போராட்டம் எதற்கு?**

அரசியல் போராட்டம் மூலம் வெற்றி பெற முடியாத நிலையில் அகிம்சைப் போராட்டம் ஆரம்பமாகின்றது. இவை இரண்டிலும் வெற்றி காண முடியாத நிலையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கின்றது. இவை மூன்றிலும் வெற்றி காண முடியவில்லையென்றால் ஆன்மீகப் போராட்டத்தைத் தவிர வேறு வழி கிடையாது. அதாவது அரசியல் போராட்டம், அகிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டம் இவைகள் மூன்றும் மனிதரால் வெற்றி காணக்கூடிய வழிகள். அப்படியிருந்தும் வெற்றி காண முடியவில்லை என்றால் அங்கே மனிதரால் வெற்றி காண முடியாது என்பது தான் அர்த்தமும் முடிவும். அடுத்து ஆன்மீகப் போராட்டம் தான் ஒரு வழி. இறைவனே ஈடு ஆன்மீகத்தின் மூலம் போராடுவது.

இந்நிலையைத் தான் அன்றே உணர்ந்த அடியேன் 8 ஆவது சந்ததிப் பூசகராகிய எனது குல தெய்வமாம் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரைத் தஞ்சம் என்று அடைந்தேன். அவரின் இறை நீதி மன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்தேன். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார். ஏற்றது மட்டுமல்ல அடியேனிடம் தமிழ் மக்களின் ஆட்சித் திறப்பை அண்மையில் தந்து வெற்றியையும் காட்டியருளி விட்டார். இந்நிகழ்வை மிக விரைவாக உங்கள் எல்லோருக்கும் நடைமுறையில் உணர்த்தப் போகின்றார். காரணங்களின்றி காரியங்கள் நடக்காது.

**ஆன்மீகப் போராட்டம் என்றால் என்ன?**

இறைவழி நின்று தேடல் என்பது பொருள்.

**ஆன்மீகப் போராட்டத்தின் நோக்கம்**

1. 'மனித சக்திக்கு அப்பாற்பட்டது தெய்வீக சக்தி'

2. 'அவனின்றி ஒரு அணுவும் அசைய முடியாது'

3. 'மனித சக்தியை ஆட்டிப் படைப்பது தெய்வீக சக்தி'

என்னும் அடிப்படையே எமது நீண்டகால தீராத இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைப் பெற்று எம் மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் எமது மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்பதே எனது நோக்கம்.

ஒரு ஆன்மீகவாதி இரண்டு வகையான உலகைக் காண்கின்றான்.

1. லௌகீக உலகம்
2. ஆன்மீக உலகம்

லௌகீக உலகம் என்பது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகமும் லௌகீக வாழ்க்கையும். ஆன்மீக உலகம் என்பது ஆன்மீகவாதிகளின் உலகமும் ஆன்மீக வாழ்க்கையும். இரண்டும் வெவ்வேறு என்றே அறிஞர்கள் கூறுவர். லௌகீக வாழ்கையில் ஆசார சீலனாக வாழும் ஒருவன் இஷ்ட தெய்வத்தின் இறையருள் பெறுவதன் மூலம் ஒரு ஆன்மீகவாதியாகின்றான். அவ்விதம் இறையருள் பெற்ற ஆன்மீகவாதியினாலேயே ஆன்மீக உலகில் சஞ்சரிக்க முடியும். அத்துடன் ஆன்மீகப் போராட்டத்தை நடத்தவும் முடியும். லௌகீக உலகிற்கு ஆன்மீகப் போராட்டப் பெறுபேற்றை அறிவிக்கவும் முடியும். சும்மா இருந்து எதையும் பெற முடியாது.

**எழுந்திடும் நினைவில் எல்லாம்**
**-நிறைந்தவன் இறைவனம்மா**
**எழுதிடும் எழுத்தில் எல்லாம்**
**- கலந்தவன் கடவுளம்மா**

மேற்கூறிய வரிகள் ஒரு ஆன்மீகவாதியின் தொழிற்பாடுகளே. ஒரு ஆன்மீகவாதி சொன்னால் நடக்கும் எழுதினால் அப்படியே நடக்கும் என்பார்கள். இதற்கு எனது ஆன்மீகப் போராட்டத்தின் மூலம் அடியேன் பெற்ற பெறுபேறுகள் நிறையவே உண்டு. இருந்தும் ஒரு சிலவற்றை அறியத் தருகிறேன்.

01. 1995 இல் யாழ் குடாவை விட்டு 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சியில் அகதிகளாக சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகினர். 5 மாதங்களின் பின்னர் யாழ் செல்வது நிச்சயம் என்னும் ஈசுர விநாயகரின் 'நம்பிக்கை' துண்டுப் பிரசுர மூலம் பெரும்பாலானவர்களை மீண்டும் யாழ்குடாவிற்கு அழைத்து வந்து குடியேற்றியவர் சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் என்பதை மறக்க முடியுமா? இது எனது ஆன்மீகப் போராட்டத்தின் பெரும் சாதனை என்றே கூறுவேன்.

**சிங்கள மக்களின் 'அரகலய' போராட்டம்...**

ஈசுர விநாயகரின் அருட்குரல் (11.11.2019) பழைய சிங்கள அரசியல் கலாசாரம் மாற்றம் பெற்று புதிய டிஜிற்றல் அரசியல் கலாசாரத்தைக் கண்டுபிடியுங்கள் என்று ஐயா எழுதி வெளியிட்டேன். இவ் எண்ணக் கருவின் காரண கர்த்தா ஈசுர விநாயகரே அன்றி வேறு யாருமில்லை. 2022 இல் சிங்கள இளைஞர்களின் தலைமையில் நடைபெற்ற அரகலய போராட்டமே இன்றைய அரசியல் மாற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

**முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு...**

எனது 33 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே தற்போதைய நிலையில் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட்டு தமிழர் நீண்ட கால இனப் பிரச்சினைக்கு உடனடி அரசியல் தீர்வைக் காணுமாறு ஈசுரவிநாயகர் கூறியருளுகின்றார். தவறினால் நாடு பறிபோவது நிச்சயம் என்று அவருக்கு ஓர் அவசர செய்தி அனுப்பியிருந்தேன். பார்த்தீர்களா? தெய்வ தண்டனையை நினையுங்கள்! சிந்தியுங்கள்! தெளியுங்கள்! உணருங்கள்! தெய்வ தண்டனையிலிருந்து யாரும் தப்பி விட முடியாது. இதை எழுதிக் கொண்டிருக்கின்ற ஐயாவை தெய்வ தண்டனை பெற்ற ஒருவர் தான் இதுவரையே தெய்வம் விட்டுவைக்கவில்லை என்றால் மற்றவர்களைத் தெய்வம் எப்படி விட்டு வைக்கும்? பொறுத்திருந்து பார்ப்போம். ஈசுர விநாயகரின் திருவிளையாடல்களை நடைமுறையில் காண்போம்.

**"பார் தெரியுது பறாளாயான் பதி"**
**பக்தர் குறைதீர்க்கும் சந்நிதி"**

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
[ஆன்மீகவாதியும் ஓய்வுநிலை ஆசிரியரும், பரம்பரைப் பரிபாலகரும்]

(2414)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 629





இது என்ன அக்கிரமம்! இராஜ்யத்தை இரண்டாகப் பிரிக்காது? எங்கள் குலத்து முன்னோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு ஒன்று சேர்த்துப் பெரிதாக்கிய மகா இராஜ்யம் இது!

இராஜ்யத்தைப் பிரிப்பதை நீ விரும்பமாட்டாய் நானும் விரும்பவில்லை, தாயே! பத்து நாட்களுக்கு முன் இந்த யோசனையைச் சொல்லியிருந்தால் பார்த்திபேந்திரனும் பொங்கி எழுந்திருந்திருப்பான். இப்போது அவனே இந்த ஏற்பாட்டுக்கு முதன்மையாக நிற்கிறான்.

இது என்ன விந்தை! அந்த பழுவூர் ராணியிடம் அப்படிப்பட்ட மாய சக்தி என்ன தான் இருக்கும்?

இளவரசி! அதை நான் உன்னிடம் கேட்க வேண்டும் என்றிருந்தேன். நீ என்னைக் கேட்கிறாய். போகட்டும் வந்தியத்தேவன் மட்டும் அவளுடைய மாய சக்திக்கு உட்படமாட்டான் என்று எதனால் நீ அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்?"

"ஐயா! காரணங் கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியாது. மனதுக்கு மனதே சாட்சி என்பார்கள். வாணர் குல வீரன் அத்தகைய துரோகம் செய்ய மாட்டான் என்று என் மனத்தில் ஏனோ நிச்சயமாகத் தோன்றுகிறது."

அப்படியானால், அதை பரீட்சித்துப் பார்த்து விடலாம் அம்மா! அப்படி என்ன பரீட்சை? காஞ்சிக்கு ஒரு தூதனை நாம் உடனே அனுப்பியாக வேண்டும். ஆதித்த கரிகாலனுக்கு மிக நம்பிக்கையான ஆளிடம் அவசரமாக ஒலை கொடுத்து அனுப்ப வேண்டும்.

என்ன விடயம் பற்றி? சற்று முன்னால் நந்தினியை விஷநாகம் என்று நீ சொல்லிவிட்டு அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாய். உண்மையில் விஷநாகத்தைவிட அவள் பன்மடங்கு கொடியவள். இந்தச் சோழ குலத்தை அடியோடு நாசம் செய்து பூண்டோடு ஒழித்து விட அவள் திட்டமிட்டிருக்கிறாள்.

கடவுளே! என்ன பயங்கரம்!" என்று குந்தவை கூறிய போது அவளுடைய உள்ளக் கடல் பற்பல எண்ண அலைகளினால் கொந்தளித்தது.

"உன் தமையன் ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் அரண்மனைக்கு அழைக்கும்படி அவள் சம்புவரையரைத் தூண்டியிருக்கி றாள். சம்புவரையர் மகள் ஒருத்தியையும், பழுவேட்டரையர் குமாரி ஒருத்தியையும் கரிகாலனுக்கு மணம் செய்விப்பது பற்றிப் பேசிவருகிறாள். இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து ராஜிசெய்விக்கும் விஷயத்தையும் அங்கே முடிவு செய்யப் போகிறாளாம். இவையெல்லாம் வெளிப் படையான பேச்சு. ஆனால் அவளுடைய அந்தரங்கத்தில் என்ன நோக்கம் வைத்திருக்கிறாளோ அது யாருக்கும் தெரியாது. எல்லாம் அறிந்தவன் என்று கர்வம் கொண்டிருக்கும் என்னால் கூட அவள் நோக்கத்தை அறிய முடியவில்லை."

அதைப்பற்றி நாம் என்ன செய்யவேண்டும், ஐயா?" ஆதித்த கரிகாலன் கடம்பூர் மாளிகைக்குப் போகாமல் எப்படியாவது தடை செய்ய வேண்டும். அதற்குத்தான் நீயும் நானும் ஒலை கொடுத்து வந்தியத்தேவனிடம் அனுப்ப வேண்டும். நம்முடைய விருப்பத்தை மீறிக் கரிகாலன் கடம்பூர் மாளிகைக்குப் புறப்படும் பட்சத்தில் வந்தியத்தேவனும் அவனுடன் போக வேண்டும். உடம்பைப் பிரியாத நிழலைப் போல் அவன் உன் தமையனைத் தொடர்ந்து காவல் புரிய வேண்டும். நந்தினியைத் தனியாகச் சந்திப்பதற்குக்கூட அவன் இடந்தரக் கூடாது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நாட்டுப்பற்று



(நேற்றைய தொடர்ச்சி...)

மன்னர் மிகவும் வற்புறுத்தியும் அவர்களிருவரும் பரிசை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. நாடே அவர்களின் தியாகத்தைப் போற்றிப் புகழ்ந்தது.

சில நாட்களில் அரசி தாய்மைப்பேறு அடைந்தார். மன்னரும் மக்களும் மிகவும் மகிழ்ந்தனர்.

மாதங்கள் உருண்டோடின. அரசிக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. செய்தியறிந்து நாடே திருவிழாக் கோலம் பூண்டது.

வேலப்பனும் ரத்னாவும் தங்கள் துக்கத்தை மறந்து, இந்த மகிழ்ச்சியில் பங்குகொண்டனர். அன்றிரவு ரத்னாவுக்குத் தன் குழந்தை ஞாபகம் வந்தது.

வைகைக் கரைக்குச் சென்றாள். குழந்தையைத்தான்விட்ட இடத்துக்குச் சென்று நின்றுகொண்டு மகன் நினைவில் கண்ணீர்விட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது திடீரென ஒருவர் ரத்னாவின் முன்னே குழந்தையோடு நிற்பது போலிருந்தது. கண்களைத் துடைத்துவிட்டு, ரத்னா உற்றுப் பார்த்தாள். மன்னருக்கு ஆசி வழங்கிய அதே முனிவர்தான்.

கையில் குழந்தையோடு நின்று கொண்டிருந்தார். அந்தக் குழந்தை ரத்னாவின் குழந்தையேதான்.

ரத்னா வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் முனிவரைப் பார்த்தாள். குழந்தையை ரத்னாவிடம் கொடுத்த முனிவர் அவளைப் பார்த்து "நீ குழந்தையை ஆற்றில் விட்டவுடன் நான்தான் எடுத்து வளர்த்து வருகிறேன்.

நீயும் உன் கணவனும் செய்த இந்த மாபெரும் தியாகத்தைப் பாராட்டுகிறேன். உங்கள் இருவருடைய நாட்டுப் பற்றை இந்த உலகம் உணரவே இது போல் செய்தேன். எதிர் காலத்தில் உன் மகன், இளவரசனுக்குத் துணையாக நின்று இந்த நாட்டைக் காப்பான் என்று கூறி, ஆசி வழங்கினார்.

குழந்தையுடன் ரத்னா வீட்டுக்கு ஓடோடி வந்த மறு நிமிடம் இச் செய்தி காட்டுத்தீ போல் பரவியது.

அரசனும் அரசியும் ரத்னாவுக்கு மீண்டும் குழந்தை கிடைத்ததை அறிந்து மிகவும் மகிழ்ந்தனர். அக் குடும்பத்தை அழைத்து, அரசவையில் உரிய மரியாதை தந்து கௌரவித்தனர். அவர்களின் நாட்டுப் பற்றை நாடே கௌரவித்தது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்களின் உறுதி மற்றும் நம்பகத்தன்மை இயற்கையாகவே உங்கள் மீதான நம்பிக்கையை வளர்க்கும்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் நேர்மையாக நடப்பதை உறுதி செய்யுங்கள்

நாடு முழுமைக்குமான நாடாளுமன்றத் தேர்தல் நாளை 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் முற்றுப் பெற்றுள்ளன.

அதேவேளை தேர்தல் ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலை நடத்தி முடிப்பதென்பது சாதாரணமானவிடயமல்ல. அதற்கான பணச் செலவுகளுக்கு அப்பால், தேர்தல் பணிகளில் ஈடுபடுகின்ற மனித உழைப்பு என்பது அளப்பரியது.

இவையாவற்றுக்கும் மேலாக, அதிகளவு அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் தேர்தல் களத்தில் இறங்கி முழுவீச்சில் தமது தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தன எனில், தேர்தல் மீது அவை கொண்ட நம்பிக்கையே காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், வேட்பாளர்கள் மட்டுமல்ல அவர்கள் சார்ந்த ஆதரவாளர்களும் தேர்தல் களத்தில் நின்று கடுமையாக உழைத்தனர்.

தத்தம் வெற்றியின் பொருட்டு அவர்களின் பாடு இருந்ததாயினும் அதற்குள் ஜனநாயகப் பணியும் உள்ளடங்கியுள்ளதென்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

அதேநேரம் பொதுத் தேர்தலில் வாக்களிப்பது என்ற தீர்மானத்தோடு, வாக்களிப்பு நிலையங்களை நோக்கி வருகின்ற வாக்காளப் பெருமக்கள் ஒவ்வொருவரும் தாம் வழங்குகின்ற வாக்குத் தமது ஆதரவுக்குரிய வேட்பாளரை வெல்ல வைக்கும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் தேர்தல் மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையிலேயே அத்தனையும் நடந்தாகிறது.

அதாவது தேர்தல் மீதான நம்பிக்கை என்பது, தேர்தல் கடமையில் ஈடுபடுகின்ற அத்தனை உத்தியோகத்தர்கள் மீதும் கொண்ட நம்பிக்கை என்று பொருள் கொள்ள வேண்டும்.

ஆம், வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றும் அனைத்துத் தேர்தல் பணியாளர்கள், வாக்குப் பெட்டிகளை வாக்குகள் எண்ணப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்கின்ற உத்தியோகத்தர்கள், வாக்குகளை எண்ணுகின்ற – அவற்றைப் பதிவேற்றம் செய்கின்றவர்கள், விருப்பு வாக்குகளைக் கணக்கெடுப்பவர்கள் என அனைவரும் கடவுள் சாட்சியாக நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில் மக்கள் வழங்கிய தீர்ப்பு உள்ளவாறு வெளிவர வேண்டுமாயின் – மக்களின் தீர்ப்பு மகேசன் தீர்ப்பாக இருக்க வேண்டுமாயின், அதற்கான ஒரே மார்க்கம் தேர்தல் பணியில் ஈடுபடும் அத்தனை பேரும் நேர்மையாகத் தேர்தல் கடமையை ஆற்றுவதாகும்.

# புதிய அரசியலமைப்பினூடாக பிரபாகரனின் நோக்கத்தை நிறைவேற்ற இடமளிக்க முடியாது

## சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபாகரனின் நோக்கத்தை புதிய அரசியலமைப்பால் நிறைவேற்ற இடமளிக்க முடியாது. நாட்டின் ஒற்றையாட்சியை கருத்திற் கொண்டு மக்கள் பொதுத்தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில்நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது கொள்கைப் பிரகடனத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக 2015 முதல் 2019 வரை ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசாங்கம் தயாரித்த சட்ட வரைவினை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியலமைப்பை தயாரிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவில் பதவி வகித்தலால் விஜய நாயக்க ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார மேடைகளில் முன்னிலையில் இருந்தார். ஒற்றையாட்சி அரசியலமைப்பினை இரத்துச் செய்து சமஷ்டியாட்சி முறைமையிலான அரசியலமைப்பை உருவாக்கும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஒற்றையாட்சி நாடு என்பதால் தான் பௌத்த சாசனம் பாதுகாக்கப்படுகிறது. அனைத்து இன மக்களும் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்கிறார்கள். சமஷ்டியாட்சி முறைமையிலான அரசியலமைப்பை உருவாக்கினால் 9 மாகாணங்களுக்கு மாறுபட்ட சட்டங்கள் இயற்றப்படும். இதனால் நாட்டின் தேவையற்ற முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெறும்.

நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்காகவே 29 ஆயிரம் இராணுவத்தினர் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தனர். அதேபோல் 14 ஆயிரம் இராணுவத்தினர் அங்கவீனமானார்கள். பாரிய இழப்பு மற்றும் தியாகத்துக்கு மத்தியில் பாதுகாத்த ஒற்றையாட்சியை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது. பிரபாகரனின் சமஷ்டியாட்சி நோக்கத்தை புதிய அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்றவும் எம்மால் இடமளிக்க முடியாது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வடக்குக்குச் சென்று மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாகவும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். தமிழ் அரசியல் கைதிகள் என்று சிறையில் எவரும் கிடையாது. விடுதலை செய்யும் அரசியல் கைதிகளின் பெயர் பட்டியலை ஜனாதிபதி குறிப்பிட்டால் அவர்கள் செய்த பயங்கரவாத செயற்பாடுகளை நான் குறிப்பிடுவேன்.

தமது அரசியல் பிரபல்யத்துக்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்த வேண்டாம் என்று அரசாங்கத்திடம் தெரிவித்துக்கொள்கிறேன், தற்போதைய சுதந்திரம் ஒன்றும் இலகுவாக கிடைத்ததொன்றல்ல என்பதை நினைவில்வைத்துக் கொள்ள வேண்டும்.

இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் தீர்மானமிக்கது. படித்தவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதை காட்டிலும் நாட்டுப் பற்றுள்ளவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும். அதிகாரத்தில் இருந்த போதும், இல்லாத போதும் நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாக்க குரல் கொடுத்துள்ளோம். தேசிய மக்கள் சக்தி நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்கும் என்ற நம்பிக்கை கிடையாது. நாட்டின் ஒற்றையாட்சியை கருத்திற் கொண்டு பொதுத்தேர்தலில் சிறந்த தீர்மானத்தை மக்கள் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன் என்றார். (ம-7)

# யாழில் கடந்த காலங்களில் செயற்பட்ட 12 வாக்களிப்பு நிலையங்கள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் வாக்களிப்பு நிலையங்களாக செயற்பட்ட 12 வாக்களிப்பு நிலையங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

ஊர்காவற்துறை தேர்தல்தொகுதியில் வேலணை மத்திய கல்லூரி விடுதி வாக்களிப்பு நிலையம் சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய மணிமண்டபத்திற்கும் நாரந்தனை தெற்கு பொது நோக்கு மண்டப வாக்களிப்பு நிலையம் நாரந்தனை தெற்கு கிராம சக்தி பொது மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலய மண்டப இல 1 வாக்களிப்பு நிலையம் வடலியடைப்பு சனசமூக நிலையத்திற்கும் அராலி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலை வாக்களிப்பு நிலையம் அராலி இந்துக் கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் வசாவிளான் மத்திய கல்லூரி மண்டப இல 2 வாக்களிப்பு நிலையம் பலாலி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

மானிப்பாய் தேர்தல் தொகுதியில் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை மண்டப இல 1 வாக்களிப்பு நிலையம் தாவடி தெற்கு சனசமூக நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கோப்பாய் தொகுதியில் அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டப இல 2 வாக்களிப்பு நிலையம் அச்சுவேலி ஆரம்பப் பாடசாலைக்கும், அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையம் விக்னேஸ்வரா முன்பள்ளிக்கும் மாற்றப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி தொகுதியில் இமையாணன் மாந்தோட்ட சிவஞான வைரவர் ஆலய மண்டப வாக்களிப்பு நிலையம் உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கும், கரணவாய் சக்கலாவத்தை பொது நோக்கு மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் கொற்றாவத்தை சித்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்திற்கும் மாற்றப்பட்டுள்ளது.

நல்லூர் தேர்தல் தொகுதியில் கொக்குவில் மேற்கு கிறிஸ்தவாலய தமிழ் கலவன் பாடசாலை மண்டப இல 1 இல் இயங்கிய வாக்களிப்பு நிலையம் ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய மண்டபத்திற்கும், நாவலர் கலாசார மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்திற்கும் மாற்றப்பட்டுள்ளது. (ம-7,33)

### வடமாகாண மரநடுகை மாதம்

### கார்த்திகை 01 - 30, 2024

**"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது "**

-மார்டின் லூதர்
(ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# மின்கட்டணத் திருத்தம் அடுத்த வாரம் பிரேரணை

## இலங்கை மின்சார சபை

மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான புதிய பிரேரணையை எதிர்வரும் வாரத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் வழங்க முடியும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பான முன்மொழிவுகள் இதற்கு முன்னரும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த பிரேரணையை மீளாய்வு செய்து கடந்த 8ஆம் திகதி சமர்ப்பிக்க வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இதற்கு இரண்டு வார கால அவகாசம் அளிக்குமாறு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தது.

இதன்படி, புதிய மின் கட்டண முன்மொழிவு அடுத்த வாரம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களை விடுவிக்கக்கோரி போராட்டம்



(சென்னை)

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி பாம்பன் பாலத்தில் மீனவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி விசைப் படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் ஒருங்கிணைந்து நேற்று செவ்வாய்கிழமை பாம்பன் பாலத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை தமிழக மீனவர்களின் 66 படகுகளை சிறைப்பிடித்து, 497 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள், அந்நாட்டின் வெளிநாட்டு மீன்பிடி தடை சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இதில் 90 மீனவர்கள் ஆறு மாதம் முதல் இரண்டு ஆண்டு காலம் வரையிலும் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டு இலங்கை சிறைகளில் தண்டனை கைதிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## சைவ பரிபாலன சபையில் சைவ சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையில் சைவ சமய தீட்சை வழங்கும் நிகழ்வு வழமைபோல் நாளை மறு தினம் வெள்ளிக் கிழமை (ஐப்பசி மாதக் கடைசி சுக்கிர வாரம்) காலை 9 மணிக்கு சைவ பரிபாலன சபையின் கல்லூரி வீதி நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வலர்களை வருகை தந்து பயன்பெற்று சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

## இசைப்போட்டியில் ரம்சியா முதலிடம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற இசைப் போட்டியில் யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்து பங்கேற்ற மாணவி ரவீந்திரன் ரம்சியா தனி வீணை இசை நிகழ்வில் பங்குபற்றி முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். (6-8)

## தேர்தலையொட்டி விசேட போக்குவரத்து

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தலுக்கு வாக்களிக்க கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்காக விசேட போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போக்குவரத்து சேவையானது நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அத்தோடு, இன்றும் இலங்கை போக்குவரத்து சபை விசேட பேருந்து சேவையை முன்னெடுக்கும் என அதன் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்காக கிராமங்களுக்குச் செல்லும் மக்களுக்கு தினசரி தொடருந்து பயணங்களுக்கு கூடுதலாக, கூடுதல் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தொடருந்து திணைக்களத்தின் துணைப் பொது மேலாளர் என்.ஜே. இடிபொல அறிவித்துள்ளார். (நி-8)

## ராஜகிரிய பகுதியில் ஆடைத் தொழிற்சாலையில் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு, ராஜகிரிய, மடவெலிகட வீதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயை அணைக்க நான்கு தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தீயணைப்பு துறையினர் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப் படவில்லை. குறித்த பகுதியூடான போக்குவரத்து நடவடிக்கையினை தவிர்க்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (நி-8)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## வழங்குநர்களை பதிவுசெய்தல்-2025

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2025 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள்,வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி. இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள் |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A-17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உடுக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுக்குளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 12 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

- வழங்கல்கள் 2025ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியான்தாகும்.
- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
- விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ.1000.00 இனைசெலுத்தி தலைமை அலுவலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2025"எனக்குறிப்பிட்டு "செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்" எனும் முகவரிக்கு 20.12.2024ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி.சாரதா உருத்திரசம்பவன்
செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
021 224 4045 / 021 224 0017

(C-1573)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2999...

திகதி முதல் நவம்பர் மாதம் 11ஆம் திகதி வரை) 2,999 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 808 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 2,135 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 21 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (ம-7)

## நெடுந்தீவுக்கு...

ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 06.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு 07 படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

அதேபோன்று நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி காலை 06.45 மணி முதல் மாலை 04.30 மணி வரையிலும் படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன என நெடுந்தீவுப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

அதேவேளை நெடுந்தீவுக்கான வாக்குப் பெட்டிகளை இன்று புதன் கிழமை படகுகள் மூலம் உத்தியோகஸ்தர்கள் எடுத்துச் சென்று, நாளை வியாழக்கிழமை வாக்களிப்பு நிறைவு பெற்றதும் விமானப் படையினரின் உலங்குவானூர்தியில் வாக்கெண்ணும் மத்திய நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்படும். (ம-7)

## யாழ்.தேர்தல்...

செயலகத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 4 லட்சத்து 92 ஆயிரத்து 280 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கிளிநொச்சியில் ஒரு லட்சத்து 907 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் .

வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கான விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக தீவகப் பகுதிகளுக்குச் செல்வதற்கு குறிகாட்டுவான் பகுதியில் இருந்து விசேட படகுச் சேவைகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு வன்முறைச் சம்பவமும் 62 சட்ட மீறல்களும் பதிவாகியுள்ளன. அது தொடர்பிலான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நாளை வியாழக்கிழமை காலை 7 மணியில் இருந்து மாலை 4 மணி வரையில் வாக்களிக்க முடியும். வாக்கெண்ணும் நடவடிக்கைகள் யாழ். மத்திய கல்லூரியில் இரவு ஆரம்பிக்கப்படும்.

அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்தார். (ம-7,33)

## வாக்களிப்பு...

விடுத்துள்ளார்.

மேலும் அமைதிக் காலப்பகுதியில் தேர்தல் பிரசாரங்களைத் தவிர்க்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில் பிரசாரங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராகத் தேர்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7)

## புதிய பாராளு...

நவம்பர் மாதம் 21ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறும் என அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## தனக்குத்...

பாண உதவித் தேர்தல் ஆணையாளரிடம் நேற்று செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

சுயேட்சைக் குழுவொன்று என்னுடைய அனுமதியின்றி, வேட்பாளர் பட்டியலில் எனது பெயரைக் குறிப்பிட்டுள்ளது.

எனக்கு இந்த விடயம் இதுவரை காலமும் தெரியவரவில்லை.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை எனது மாணவி ஒருவர் எனக்குத் தொலைபேசி அழைப்பினை எடுத்து, தேர்தலில் போட்டியிடுகிறீர்களா? என வினவியபோதே, எனது பெயர் வேட்பாளர் பட்டியலில் வந்திருந்தமை தெரியவந்தது.

இது குறித்து நேற்றுச் செவ்வாய்க் கிழமை யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்கள அலுவலகத்திற்கு சென்று அது என்னுடைய பெயர்தான் என்பதனையும் எனது அனுமதியின்றி எனது பெயரை வேட்பாளர் பட்டியலில் சுயேட்சைக் குழுத் தலைவர் உள்ளடக்கியுள்ளார் என்பதனையும் உறுதிப்படுத்திக் கொண்டேன்.

அது தொடர்பில் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் முறையிட்டுள்ளேன் என்றார். (ம-7,33)

## அமைதியான...

அமைதியான காலப்பகுதியில் தேர்தல் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளை முன்னெடுக்காமல், அமைதியானதொரு தேர்தலை நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெறாத பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தற்போது அவற்றைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தளம் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதன் படி, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் இ-சேவை இணையத்தளத்திற்குச் சென்று, தங்களது வாக்காளர் அட்டைகளைப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.

அத்துடன் வாக்கெண்ணல் இடம்பெறும் வேளையில் முடிந்தவரை வீடுகளில் இருக்குமாறும், குறித்த காலப்பகுதியில் பட்டாசு கொளுத்துதல், அநாவசியமாக ஒன்றுகூடல் என்பவற்றைத் தவிர்க்குமாறும் அவர் கோரியுள்ளார்.

ஏனவே வாக்களித்த பின்னர் அமைதியான முறையில் வீடுகளுக்குச் செல்ல வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.(ம-7)

## வாக்கெண்ணும்...

கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நாளை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக, வாக்குப்பெட்டி விநியோகித்தல் மற்றும் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட பிரதி அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று கள ஆய்வு செய்யப்பட்டது.

இக் கள ஆய்வில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும், வெளிப்புற சூழலில் வாகனப் போக்குவரத்தினை மட்டுப்படுத்தல் தொடர்பாகவும், யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் தேர்தல் பணியாளர்கள் மற்றும் முகவர்களின் வாகனப் பாதுகாப்புத் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.11.12
சீட்டிழுப்பு இலக்கம் 5654
U 0 2 4 5 2 5
அத சம்பத U 4 5 2 5
சீட்டிழுப்பு இலக்கம் 229
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1684
D 11 29 48 64 D
Double Chance 71670

மெகா பவர்
திகதி 12/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2002
W 09 11 13 23 77
137902

லக்கி 7 VIP
திகதி 2024.11.12
சீட்டிழுப்பு இலக்கம் 0480
V 4 1 5 3 0 8 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3896
சீட்டிழுப்பு திகதி 12.11.2024
M 24 32 42 77
M 072131

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.12
சீட்டிழுப்பு இலக்கம் 963
விருச்சிகம் 13 37 40 44 விருச்சிகம்
013962 14

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.11.2024 வெற்றி வாரம் 362
K 2 8 9 6 6 2
45900
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,470.340.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2628
சீட்டிழுப்பு திகதி 2024.11.12 தினம் செவ்வாய்க்கிழமை
17 35 48 49 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,296,160.00
DLB

சனிதா
திகதி 12.11.2024 வெற்றி வாரம் 4789
01 04 24 29 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,107,342.00
60087
DLB

சசிரி
வெற்றி வாரம் 556
சீட்டிழுப்பு திகதி 12.11.2024
செவ்வாய்க்கிழமை
13 25 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4340
சீட்டிழுப்பு திகதி 12.11.2024 தினம் செவ்வாய்க்கிழமை
கன்னி
18 23 27 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,091,597.20
117595
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 09 21 36 54 57
1804
12.11.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.555,241,113.80
DLB

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2454
சீட்டிழுப்பு திகதி : 2024.11.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,883,089.60
அத கோடிபதி ADA KOTIPATHI
13 47 58 67 H
663965
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடர்களை பாராளுமன்றம் அனுப்பி மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது

## பிரதமர் ஹரிணி



திருடர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி மாற்றங்களை எதிர்பார்க்க முடியாதென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

ஹோமாகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் எண்ணக்கருவுக்கு பொருத்தமான பாராளுமன்றம் இம்முறை பொதுத் தேர்தலில் உருவாக்கப்பட வேண்டுமென,

அதேபோன்று நாளை 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதியை பிரதிநிதித்துவப் படுத்தும் சிந்தனைகள் போன்று அரசியல் மாற்றத்துக்காக பொருத்தமான தரப்புடன் பாராளுமன்றம் உருவாக்கப்பட வேண்டுமெனவும், அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசாங்கமானது நாட்டுக்கு பொருத்தமான வரவு, செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து அதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு தரமான தரப்பினரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத் தேர்தல் வெற்றி எண்ணிக்கையில் மட்டுமன்றி சிறந்த மாற்றங்களும் அவசியமெனவும் குறிப்பிட்டுள்ள அவர், திருடர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி மாற்றங்களை எதிர்பார்க்க முடியாதெனவும் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் பாராளுமன்றத்தை பற்றி சிந்திக்கும் போது இதுவரைகாலமும் இருந்த மோசமான எண்ணங்கள் வரக்கூடாதென்ற வகையில் அந்த மாற்றத்தை மக்களே மேற்கொள்ள வேண்டுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# விபரீத முடிவெடுத்த ஆசிரியை மரணம்



முன்பள்ளி ஆசிரியை ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மொனராகலை நக்கல்லை யொவுன் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

மொனராகலை நக்கல்லை யொவுன் கிராமம், நக்கலவத்தை பாரதி முன்பள்ளியின் ஆசிரியராக பணிபுரிந்த 29 வயதுடைய ராமச்சந்திரன் இந்திராதேவி என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த ஆசிரியை காதல் முறிவு காரணமாகவே உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ம-7)

# அரச வைத்தியசாலைகளில் தரமற்ற மருந்து விநியோகம்

## 18 முன்னாள் அமைச்சர்களிடம் வாக்குமூலம் பெற நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளுக்கு தரமற்ற மருந்துகளை விநியோகித்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்காக, அப்போது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த 18 அமைச்சர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல்ல சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையில் அங்கம் வகித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் அமைச்சர்களான டிரான் அல்ஸ், மஹிந்த அமரவீர, விஜயதாஸ ராஜபக்ஷ, ஹரின் பெர்னாண்டோ, ரொஷான் ரணசிங்க, நிமல் சிறிபால உள்ளிட்ட அமைச்சரவையைப் பிரதிநிதித்துவப்படுத்திய 18 பேரிடம் வாக்குமூலம் பெறுவது அவசியம் என நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உத்தரவு ஒன்றை வெளியிடுமாறு சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, மாளிகாகந்த நீதிமன்றில் கோரியதையடுத்து, அதற்கு அனுமதியளித்து நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ம-7)

# ஆட்பதிவு இடம்பெறாது


பொதுத் தேர்தல் தினத்தன்று ஆட்பதிவுத் திணைக்களத்தின் பொதுச் சேவைகள் இடம்பெறாதென அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

ஒரு நாள் சேவை உட்பட அனைத்து பொதுச் சேவைகளும் நாளை 14ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெறாது என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1930 - 12 - 05 | 2024 - 11 - 12 |



### சின்னத்தம்பி விஸ்வலிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விஸ்வலிங்கம் அவர்கள் 12.11.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - ரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும் சுகந்தினி, சுதர்சினி, காலஞ்சென்ற நிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரன் (யாழ். மாநகர சபை) அவர்களின் அன்பு மாமனாரும் பேளினியின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ராசரத்தினம் மற்றும் கனகம்மா, ராசநாயகம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, பராசக்தி, தவராசா, தங்கராசா, ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் சரஸ்வதி, ஆறுமுகராசா, ரஞ்சிதமலர், ஜெயராஜா ஆகியோரின் மைத்துனரும் விக்னானந்தா, சுதானந்தா, சிவநாதன், அனுசலா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் சௌவுந்தயன், வஜீரா, ஜெனார்த்தனன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.11.2024 புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

128, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(2418)

மொத்தக் கொள்வனவு
அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.
48/= 
-80/=
ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 773 0900
(535)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1577)
076 825 7716 (ஆகாஸ்)

விற்பனைக்குண்டு
60 அடி நீளமுள்ள கோழிக்கூடும் தூண் அரியும் இரும்பு அச்சும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு (2595)
077 6299 675

பௌதிகவியல் (A/L)
2025/2026
தனிப்பட்ட / குழு வகுப்புக்கள்
மீட்டலும் கடந்த கால வினா விடைகளும்
ஆ.நித்தியானந்தன் B.Sc, Dip-in-Ed
தொடர்புகட்கு : 076 7999 005
15B, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(2593)

விடுமுறைகால புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
தரம் 01 - 03 வரையான வகுப்புக்களும்
தரம் 06 - 09 வரையான வகுப்புக்களும்
ஆரம்பமாகின்றன. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்.
(C-1579)
077 428 6976

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1578)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.